# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூலை மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 18.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டம்

[2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 24/2007

**வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார நியமங்கள் மீதான கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்காக வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகத்தைத் தாபிப்பதற்கும் ; தொழில்தருநர்கள் ஊழியர்கள் ஆகிய இருவரையும் பாதுகாப்பதற்காக எல்லா வேலையிடங்களிலும் வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார சூழலொன்றை உருவாக்குவதற்காகவும் ; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமெண்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப்பெயர்.*

### பாகம் I

### வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகத்தைத் தாபித்தல்

*வாழ்க்கைத் தொழிசார் தற்காப்பு மற்றும் சுகாதாரத் திற்கான தேசிய நிறுவகத்தை தாபித்தல்.*

**2.** (1) (இது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அந்நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு ஒரு கூட்டிணைக்கப் பட்ட குழுவாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமை யும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) அந்நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் :-

(அ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் மீதும் மற்றும் தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்களின் தற்காப்பு மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் தன்மை என்பவற்றை கருத்திற்கொண்டு தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்கான வேலைச்சூழல் மீதும் தேசிய கொள்கையொன்றை வகுப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல் ;

(ஆ) வேலையிடங்களில் வாழ்க்கைத் தொழிலுடன் தொடர்பான விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்குத் தேவைப்படும் வழிவகைமீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல் ;

(இ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார துறைகளில் நுண்ணாய்வு, கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல், மேற்கொள்ளல் மற்றும் உதவுதல் ;

(ஈ) உபகரணங்கள் தீமையான பதார்த்தங்கள், பௌதீக, பதார்த்தங்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் கருவிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது வேறு ஏதேனும் தீமையான பொருட்களின் சரியான உபயோகம்மீது ஏதேனும் நிறுவனம் அல்லது ஆளுக்கு மதியுரைச் சேவைகள் வழங்குதல் ;

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது வேறேதேனும் நிறுவனங்களுடன் ஒன்றில் ஒன்றிணைந்துள்ள அல்லது நிறுவகத்தால் தேவைப்படுத்தப்பட்ட வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் அது தொடர்பான விடயங்களில் ஊழியர், இருப்பாட்சியாளர் தொழிலாளர் அல்லது வேறெவரேனும் ஆளுக்கு கல்வியறிவூட்டுவதற்கும் தேவையான பயிற்சியை வழங்குவதற்கும் அத்துடன் அத்தகைய கல்வி அல்லது பயிற்சி முடிவடைவதன் மீது சான்றிதழ் அல்லது திப்புளோமா அளிப்பதற்கும் ;

(ஊ) உபகரணங்கள், தீமையான பதார்த்தங்கள், பௌதீக இரசாயன உயிரியல் கருவிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் உளரீதியான, தீமைகளின் சரியான உபயோகம்மீது தேவைப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கும் தெரிந்த தீமைகளை தவிர்ப்பதற்கும் ;

(எ) (i) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பிலான கருமங்களின் நியமங்கள், குறியீடுகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுநெறிகள் தொடர்பிலான சட்டவாக்க தேவைப்பாடுகளின்மீது அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் ;

(ii) பதார்த்தங்கள் மற்றும் கருவிகள் எந்த வெளிப்பாடுகளுக்கு தடைசெய்யப்பட்டுள்ளதோ மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது கண்காணிப்பிற்கு அமைய செய்யப்பட்டுள்ளதோ அந்த வெளிப்படுத்தல்களின் வேலைச் செய்முறையை மதிப்பிடலும் தீர்மானித்தலும்;

(ஏ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவலை சேகரித்தல், தயார்படுத்தல், பரப்புதல் மற்றும் வெளியிடலை பொறுப்பேற்றல் அல்லது ஒன்றிணைத்தல் ;

(ஐ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பிலான மாநாடுகள், கருத்தரங்குகள் செயலமர்வுகள் கூட்டுலாக்கள் அல்லது அதேபோன்ற வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணை வழங்குதல் மற்றும் பத்திரங்களை வெளியிடல் ;

(ஒ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம்மீதான அமைச்சுகளிடையிலான கருத்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை இணைத்தல் ;

(ஓ) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் கைக்கொள்ளலை முன்னேற்றுவதற்காகவும் வலுப்படுத்துவதற்காகவும் நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களை தாபித்தல் மற்றும் பராமரித்தல் ;

(ஔ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை விருத்தி செய்தல் ;

(க) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார துறைகளிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புகளுடன் தொடர்பாயிருத்தலும் இணைப்பு மற்றும் வலையமைப்புகளை தாபித்தலும் ; அத்துடன்

(ங) வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார துறைகளில் தேசிய நியமங்களை தாபித்தல்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவின் (எ) எனும் பந்தியில் குறித்துரைக்கப்படும் கருமங்கள் தொடர்பிலான மதியுரைக்கு மேலதிகமான (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எல்லா அல்லது ஏதேனும் கருமங்கள்மீதும் காலத்திற்குக்காலம் அமைச்சரால் நிறுவகத்திற்கு குறிப்பீடுசெய்யப்படக்கூடிய வாறான வேறு ஏதேனும் கருமம்மீதும் அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் வேண்டும்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

**4.** (1) நிறுவகமானது, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அதன் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அதில் ஏதேனுமொன்றை நிறைவேற்றுவதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கு தத்துவமுடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி –

(அ) வேலையிடங்களில் அல்லது வேலைச்சூழல்களில் பேணப்படவேண்டிய நியமங்களை காலத்திற்குக் காலம் கணக்கிடலாம் மற்றும் மதிப்பிடலாம் என்பதுடன் அத்தகைய நியமங்கள் தொடர்பான சட்டவாக்கத் தேவைப்பாடுகள்மீது அமைச்சருக்கு மதியுரை வழங்கலாம் அத்துடன் அவ்வாறு வேண்டப்படுமிடத்து வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் சேவைச்சூழல் தொடர்பான எல்லாக் கருமங்கள்மீதும் இருப்பாட்சியாளர்கள், தொழிலாளர் அல்லது வேறு எவரேனும் ஆட்களுக்கு மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கும் ;

(ஆ) நிறுவகத்தால் வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு, ஒழுங்கமைப்பிற்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் அல்லது வசதிகள் அல்லது அளிக்கப்பட்ட சேவைகளுக்காக கட்டண மொன்றை விதிக்கலாம் அத்துடன் அறவிடலாம் ;

(இ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத் திற்காக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், அல்லது வாடகைக்கு கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், பிணைவைக்கலாம், விற்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் ; அத்துடன்

(ஈ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளை நிறுவகத்தால் அல்லது வேறு எவரேனும் அலுவலரால் அல்லது நிறுவகத்தால் அது சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் செய்யலாம் அல்லது நிறைவேற்றலாம்.

பாகம் II

**நிறுவகத்தின் ஆளும்பேரவை**

*ஆளும் பேரவையின் அமைப்பு.*

**5.** (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளும்பேரவையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தத்துவங்களும் கடமைகளும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது -

(அ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள் -

(i) தொழில்தருநர் ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளான இருவர் ;

(ii) வேலையாட்கள் ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளான இருவர் ;

(iii) தற்காப்பு மற்றும் சுகாதாரம் அடங்கலான தொழிற்பாடுகளிற்கு சட்டமொன்றின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றின் உறுப்பினர்களாக இருக்கவேண்டியவர்களும் வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பிரபல்யமான மூன்று ஆட்கள்.

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் -

(i) தொழில் என்ற விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற, ஆள், அவர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) தொழில் ஆணையாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள், அவர் பேரவையின் துணைத் தவிசாளராதல் வேண்டும்;

(iii) தொழில் ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு) என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் ;

(iv) தொழில் ஆணையாளர் (வாழ்க்கைத் தொழில்சார் உடல்நலம்) என்ற பதவியை வகிக்கின்ற ஆள் ;

(v) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளரொருவர் பதவிநிலைக்கு குறையாத பதவிவகிக்கின்ற உறுப்பினர் ஒருவர் ;

(vi) சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச்செயலாளரொருவர் பதவிநிலைக்கு குறையாத பதவி வகிக்கின்ற உறுப்பினர் ஒருவர் ;

(vii) கைத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளரொருவர் பதவிநிலைக்கு குறையாத பதவி வகிக்கின்ற உறுப்பினர் ஒருவர் ;

(viii) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளரொருவர் பதவிநிலைக்கு குறையாத பதவி வகிக்கின்ற உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(ix) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனும் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள்,

என்போரைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

பேரவையின் செயலாளர்.

**6**. பேரவைக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் பேரவையின் பதிவேடுகளை வைத்திருத்தலும், பராமரித்தலும் வேண்டும். பேரவை நிறுவகத்தின் பணிப்பாளரொருவரை செயலாளராக நியமித்தல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**7**. (1) பேரவையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும் அவர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலொழிய அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய அவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக்கொள்வதன் மீது பயனுறுதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் உடல்நலக்குறைவு காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்தால் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வருமிடத்து அமைச்சர் அவருக்குப் பதிலாகக் கடமை புரிவதற்கு இன்னுமோர் ஆளை நியமிக்கலாம்.

(4) அமைச்சர் விடயத்திற்குப் பொறுப்பான இயைபான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தேவைப்படுத்தப்படும் போது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை அதற்காக குறித்தொதுக்கப்பட்ட காரணத்திற்காக பதவியிலிருந்து அகற்றுவது உகந்ததெனக் கருதினால் அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன் அத்தகைய உறுப்பினனர் தமது பதவியை வறிதாக்கியவராக கருதப்படுதல் வேண்டும்.

(5) எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கல், பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பட்சத்தில் அமைசசர் அவருக்குப் பதிலாக கடமையாற்ற பொருத்தமான எவரேனும் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், தமக்கு முன் பதவி வகித்தவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கு பதவி வகித்தலும் வேண்டும்.

*பேரவையின் உறுப்பாண்மைக்கான தகைமையீனம்.*

**8.** ஆளொருவர் –

(1) பாராளுமன்றத்தின் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராக விருப்பின் அல்லது உறுப்பினராகவரின் ; அல்லது

(2) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப் படுத்தப்படின் ;

(3) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றொரு வராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத் தப்பட்டவராயிருப்பின் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படாத வகையற்ற ஒருவராயின் அல்லது வங்குரோத்து அடைந்தவராக இருப்பின் ; அல்லது

(4) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டி லுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பிற்கு உட்பட்டவராயிருப்பின் அல்லது உட்பட்டவராயிருந்திருப்பின்,

பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

*கூட்டங்கள்.*

**9.** (1) பேரவையின் தவிசாளர் பேரவையின் கூட்டமொன்றை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டுதல் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் விசேட கூட்டமொன்றிற்கு பேரவையின் ஏழு உறுப்பினர்களால் அவ்வாறு செய்வதற்கு எழுத்தில் கோரிக்கைவிடுக்கப்பட்டதன் பின்னர் பதின்னான்கு நாட்களுக்குள் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல்களை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வோர் உறுப்பினருக்கும் எழுத்திலான ஆகக்குறைந்தது ஏழு நாள் அறிவித்தலை வழங்க வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலில் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல்களை குறித்துரைத்தலும் வேண்டும்.

(4) தவிசாளர் வருகைதராதவிடத்து துணைத் தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை வகித்தல் வேண்டும்.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) பேரவையின் முடிவிற்கான எல்லாப் பிரச்சினைகளும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கொன்றால் தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமனாக இருக்கும் பட்சத்தில் தகைமை வகிக்கும் அலுவலர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) பேரவையின் ஒவ்வொரு கூட்ட நடவடிக்கைகளும் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(8) இதனகத்தான ஏற்பாடுகளுக்கமைய, பேரவை அதன் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் தீர்மானிக்கின்ற விதிகளை ஆக்கலாம்.

(9) பேரவையில் ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் அல்லது தேர்விற்கான பெயர் குறிப்பீட்டில் ஏதேனும் குறைபாடு என்ற காரணத்தால் பேரவையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

**10.** (1) பேரவையால் (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாக ஆளொருவர் நியமிக் கப்படுதல் வேண்டும். அவர் வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார செயற்பாட்டில் போதிய அறிவு மற்றும் குறைந்தபட்சம் பத்துவருட அனுபவத்தைத் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் முழுநேர அலுவலரொருவராதல் வேண்டும் என்பதுடன் பேரவையின் பணிப்புரைக்கு அமைய, பேரவையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் பொறுப்பானவாயிருத்தல் வேண்டும் என்பதுடன் அவருக்குக் குறித்தொதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவை, அதற்கான குறித்தொதுக்கப்பட்ட காரணங் களுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்.

நிறுவகத்தின் பணிப்பாளர்.

**11.** நிறுவகத்தின் வினைத்திறனான நிருவாகத்திற்காக அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்கள் நிறுவகத்தின் பணிப்பாளர்களாக பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆட்கள் அத்தகைய பணிப்பாளரான அதே தொழிற்பாட்டுடனான நிலையொன்றில் ஏழு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிலைக்கு இயைபாகின்றவாறான போதியளவு அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பணியாட்டொகுதி நியமனம்.

**12.** (1) நிறுவகமானது இச்சட்டத்தின்கீழ் அதாவது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பயனுற பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானவரென கருதக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவகமானது –

(அ) நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்களுக்கான ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிர யோகிக்கலாம் ;

(ஆ) பணியாட்டொகுதியின் கூலிகள், வேதனங்கள் அல்லது வேறு ஊதியங்களை நிர்ணயித்தல் ; மற்றும்

(இ) நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர் களின் சேவை நியதி நிபந்தனைகளை தீர்மானித்தல்.

*நிறுவகத்திற்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

**13.** (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரதும் சம்மதத்துடன், சபையினால் அதையொத்த சம்மதத்துடன் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிறுவகத் தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர் பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங் கத்திற்குச் சேவைபுரிய உடன்படுவதாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளவரான ஆளெவரையும் நிறுவகமானது ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்திற்கு புரியப்பட்ட சேவைக்காலப் பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவ்வாளினால் அரசாங் கத்திற்கு புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பேரவையின் வேண்டுகோளின் பேரில் உள்ளூர் அரசாங்க சேவையின் உறுப்பினர் ஒருவர் அல்லது உள்ளூர் அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அந்த உறுப்பினர், அலுவலர் அல்லது தொழிலாளியின் சம்மதத்துடன் நிறுவகத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் விடயத்திற்கேற்ப நிறுவகம் மற்றும் உள்ளூர் அரசாங்க சேவை மதியுரைச் சபை அல்லது உள்ளூர் அதிகாரசபையால் உடன்பட்டுக்கொள்ளக் கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் உள்ளடங்கலான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீதும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக ஆளொருவர் நியமிக்கப் படுகின்றவிடத்து, அவர் பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராகவிருத்தல் வேண்டும்.

தத்துவங்களைக் கையளித்தல்.

**14.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவையின் அங்கீகாரத்துடனும் இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது பணியை கையளித்தல் அவசியமென கருதுகின்றபோதும் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர் பணிப்பாளர் தலைமை யதிபதியின் பணிப்புரை மற்றும் கட்டுப்பாட்டிற்கு அமைய ஏதேனும் தத்துவம் அல்லது பணியை பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றல் வேண்டும்.

(2) அத்தகைய கையளித்தல் எது எவ்வாறிருப்பினும் நிறுவகமானது ஏதேனும் அத்தகைய தத்துவத்தை கடமையை அல்லது பணிகளை தொடர்ச்சியாக பிரயோகிக்கலாம் அல்லது புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

தகவலைத் திரட்டுதல்.

**15.** பணிப்பாளர் தலைமையதிபதி எவரேனும் இருப்பாட்சியாளர் அல்லது அரசாங்க அல்லது தனியார்துறை நிறுவகத்தின் தலைவர் ஆகியோரை எழுத்திலான அறிவித்தல் மூலம் இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இயலச்செய்வதற்கு அத்தகைய நிறுவனத்தின் நோக்கெல்லையுள் வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரம் சம்பந்த மான பணிகளுடன் தொடர்பான அத்தகைய எல்லாத் தகவலை யும் அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் கொடுத்துதவுவதற்கு தேவைப்படுத்த லாம்.

## பாகம் III

### நிறுவகத்தின் நிதியமும் நிதிகளும்

*நிறுவகத்தின் நிதியம்.*

**16.** (1) நிறுவகம் அதன் சொந்த நிதியத்தை (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:–

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டிற்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும் மானியக்கொடையென்ற வகையில் அல்லது கடனென்றவகையில் அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினால் நிறுவகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் நிதியம் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அல்லது திரட்டப்பட்ட ஏதேனும் தீர்வையிலிருந்தான வரும்படிகள் ;

(இ) கட்டணங்களும் அறவீடுகளும் என்ற வகையாக கிடைக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) நிறுவகத்தால் செய்யப்பட்ட ஏதேனும் முதலீடுகளிலிருந்தான வருமானமாக நிறுவகத்தால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(உ) நிறுவகத்தினால், அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும் போதும் புரியும்போதும் நிறுவகத்தால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஊ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினும்சரி எத்தன்மைத்தானதுமான மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், அன்பளிப்புகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் நிறுவகத்தால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் –

(அ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆளும் பேரவையின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியம் ;

(ஆ) நிறுவகத்தின் விரிவுரையாளர்கள், ஆலோசகர்கள், நிபுணர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்படற்பாலதான வேதனங்கள், படிகள் மற்றும் அத்தகைய வேறு கட்டணங்கள் அல்லது கொடுப்பனவுகள் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் நிறுவகத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**17**. (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் நிதியாண்டு தொடர்பிலும் கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவுகளுக்கான கூற்றொன்றையும், வருமானம் மற்றும் செலவினத்திற்கான கூற்றொன்றையும் ஒவ்வோர் முதலீடுகளுக்குமான முகப்பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதியைக் காட்டும் முதலீடுகளுக்கான கூற்றொன்றையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும். இவ் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட ஒவ்வோர் கூற்றுகளிற்குமான பிரதியொன்று அடுத்துறும் ஆண்டு செத்தெம்பர் முப்பதாம் தேதிக்கு முன்னர் அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக் காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவக கணக்குகளின் கணக்காய்வுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அறிக்கை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல்.*

**18.** நிறுவகத்தின் வேலைக்கான ஆண்டறிக்கையொன்றை நிறுவகம் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அதனை அடுத்துறும் ஆண்டு முடிவிற்கு முன்னர் அத்தகைய அறிக்கையை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

*நிறுவகத்தின் விதிகள்.*

**19.** நிறுவகத்தின் அலுவல்களை நிருவகித்தல் தொடர்பாக வும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனங் கள் பதவி உயர்வுகள் வேதனாதிகள் ஒழுக்காற்று கட்டுப்பாடு அவர்களுக்கு லீவு அனுமதித்தல் உள்ளடங்கலாக அலுவலர்கள் சேவையாளர்கள் தொடர்பில் நிறுவகம் விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

*விதிகளை ஆக்குதற்கான தத்துவம்.*

**20.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென தேவைப் படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டவை தொடர்பில் அல்லது இச்சட்டத்தின் கோட்பாடுகளிற்கு பயன்கொடுக்கும் நோக்கத்திற்கென ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்பபடுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் பாதுகாக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் இதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எத்தேதியில் அவ்வாறு இல்லாதொழிக்கப் படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் இலச்சினை.

**21**. நிறுவகத்தின் இலச்சினையானது, பேரவை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பேரவையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகையமுறையில் மாற்றப்பட லாம். நிறுவகத்தின் இரு உறுப்பினர்கள் முன்னிலையிலல்லாது நிறுவகத்தின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் இடப்படுதலாகாது, அவ் உறுப்பினர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். பேரவை யானது, எவ்வாவணங்களில் நிறுவகத்தின் இலச்சினை இடப்படு கின்றதோ அவ்வெல்லா ஆவணங்களின் பதிவேடொன்றை பேணுதல் வேண்டும்.

பிரவேசிப்பதற்கும் சோதனையிடு வதற்குமான தத்துவம்.

**22**. நியாயமான எல்லா நேரங்களிலும் ஏதேனும் வேலை யிடங்களுக்கு பிரவேசிப்பதற்கும் நிறுவகத்தின் எல்லா அல்லது ஏதேனும் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அலுவலரொருவருக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதி பதியால் அது சம்பந்தமாக அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அவ்வாறு அதிகாரமளிக்கப் பட்ட ஒவ்வொரு அலுவலர் அல்லது முகவருக்கு அத்தகைய நியமன சான்றிதழொன்றுடன் அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அதிகாரமளிப்பு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பணிகள் அல்லது செயல் களை நிறைவேற்றுவதற்காக ஏதேனும் வேலையிடம் அல்லது வளவுகளுக்குள் பிரவேசிக்கின்றபோது அவ்வாறு தேவைப்பட் டால் வேலையிடம் அல்லது வளவுகளின் பொறுப்பு வகிக்கின்ற ஆளுக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அத்தகைய சான்றிதழை அல்லது அதிகாரமளிப்பை காண்பித்தல் வேண்டும்.

காணிகொள்ளுதல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

**23**. ஏதேனும் அசைவற்ற ஆதனமானது நிறுவகத்தின் ஏதேனும் குறித்த நோக்கத்திற்கெனக் கொள்ளப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சரானவர், வர்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்நோக்கத்திற்காக உத்தேசக்கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதன மானது பகிரங்க நோக்கம் ஒன்றுக்கு தேவைப்படுவதாகக் கருதப் படல் வேண்டும் என்பதுடன் (420 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் அதற்கிணங்க கொள்ளப்படலாம்.

செலவுகள் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல்.

**24.** (1) நிறுவகத்திற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்திற்கு செலுத்தப் பட்ட அல்லது நிறுவகத்தால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் நிறுவகத்தின் நிதியத்துள் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரால் அல்லது சேவையாள ரால் இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்புகளின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத் துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் முடிவு செய்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத் திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**25.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**26.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத் தினாலொழிய "இருப்பாட்சியாளர்" என்பது அரசாங்கத்தின் அலுவல்களை முகாமை செய்கின்ற அல்லது நிருவகிக்கின்ற எவரேனும் ஆள் அல்லது முகாமைத்துவ அல்லது நிருவாக பணிகள் கையளிக்கப்படுகின்ற எவரேனும் அதிகாரி உள்ளடங்கலான ஏதேனும் தனியார் தாபனம், நிறுவனம், பகிரங்க கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட குழு, தொழிற்சாலை அல்லது ஏதேனும் கைத்தொழிற்சாலை என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*